# ★ மணகிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றிநாள்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் [illegible] திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 9 இதழ் 189
யாழ்ப்பாணம் புதன்கிழமை 25 — 8 — 1993

## தமிழீழமெங்கும் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)
மணகிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றிநாள் இன்று தமிழீழம் எங்கும் கொண்டாடப்படுகின்றது.
மணகிண்டிமலை தகர்ப்புபற்றிய மாதிரி வடிவமைப்பு, கோம்பையன்மணல் மயானப் பகுதியில் மிகத்தத்ரூபமாக தமிழீழ மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் சித்திராங்கி சங்கம் அமைத்துள்ளது.
மேற்படி வடிவமைப்பை, முள்ளி வேலி சிறப்புத் தள
(4-ம் பக்கம் பார்க்க)

## அதிர்ச்சியிலிருந்து அரசு மீள முடியாது தவிப்பு

(யாழ்ப்பாணம்)
"தமிழீழத்தின் இதயப் பகுதியில் தமிழர் படையணி தொடுத்த வெற்றிகரமான மணகிண்டிமலை முகாம் மீதான தாக்குதல் சிங்கள பேரினவாதத்தின் இதயத்தை உலுக்கி எடுத்துவிட்டது மாதம் ஒன்று கடந்த நிலையிலும் முகாம் தகர்ப்பு கொடுத்த அதிர்ச்சியிலிருந்து அரசு இன்னமும் மீளமுடியாது தவிக்கின்றது. இவ்வாறு விடுதலைப்புலிகள் மணகிண்டிமலை முகாம் தகர்
(4-ம் பக்கம் பார்க்க)

● இராணுவ ஆட்சேர்ப்பு பெரும் பின்னடைவு

# படைகளைபலப்படுத்தமுடியாது

# இலங்கை அரசு திண்டாட்டம்!

## யுத்தம் தொடரமுடியாத நிலை

(கொழும்பு)
சிறிலங்கா இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் தயக்கம் காட்டி வருவதால் இராணுவத்தைப் பலப்படுத்தமுடியாது வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை தொடர முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டு வருவதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்,

சிறிலங்கா இராணுவத்தில் ஆட்களைச் சேர்ப்பதற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னதாகவே பத்திரிகைகள் மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலம் பெரியளவில் விளம்பரம் செய்யப்பட்டன.
அத்துடன் இராணுவத்தில் ஆட்சேர்ப்பதற்கான தகைமைகளும் அரசினால் குறைக்கப்பட்டிருந்தும் கடந்த திங்கட்
(4-ம் பக்கம் பார்க்க)

## படைகளுக்கு ஆட்களை திரட்ட மேலும் புதிய சலுகைகள்

(கொழும்பு)
சிறிலங்கா இராணுவத்துக்குப் புதிதாக ஆட்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவை அடுத்து புதிதாகச் சேர்க்கப் படவுள்ளவர்களுக்கு புதிய சலுகைகளை சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.
இதன்மூலம் படைகளுக்கு கூடுதலாக ஆட்களைத் திர
(4ம் பக்கம் பார்க்க)

## மணகிண்டி மலை முகாம் தகர்ப்பு: 15 படையினருக்கு எதிராக இராணுவநீதிமன்றில்வழக்கு

(கொழும்பு)
விடுதலைப்புலிகளால் தகர்க்கப்பட்ட மண்கிண்டிமலை இராணுவ முகாமில் முகாம் தகர்க்கப்பட்ட அன்று கடமையிலிருந்த இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
முகாம் தகர்ப்பைவிசாரித்த
(4-ம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டி வீதிகளில் தினமும் தலை துண்டிக்கப்பட்ட சடலங்கள்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிப் பகுதியில், தலை துண்டிக்கப்பட்ட இளைஞர்களின் சடலங்கள் வீதிகளில் காணப்படுகின்றன.
இக்கொலைகள் சிறிலங்கா விசேட படையினர் செய்து வருகின்றனர் எனத் தெரிய வருகிறது.
சித்தாண்டியில் அமைந்
(4-ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கியவர் கால் துண்டிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கோட்டைப் பக்கமாகச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலதுகால் முழங்காலுக்கு கீழ் துண்டிக்கப்பட்டார்,
இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது சோப்பாய் இருபாலையைச் சேர்ந்த வேலாயுதம் ஸ்ரீகந்தா (வயது 25 என்பவரே கால் துண்டிக்கப் பட்டவராவார். —15.-56.

## கிளாலி பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித் துறை அறிவித்துள்ளது. கி.

## மணலாறில் ஷெல் தாக்கு இரு சகோதரிகள் காயம்

(யாழ்ப்பாணம்)
மணலாறு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து முல்லை மாவட்டத்திலுள்ள செம்மலைப் பகுதியை நோக்கி நேற்று முன்தினமிரவு நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகள் காயமடைந்தனர்.
ஜெயராணி சந்திரமோகன்
(4-ம் பக்கம் பார்க்க)

## படை முகாம்களிலிருந்து பீரங்கி, ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 1.-30 மணிக்கு மாதகல் பண்டத்தரிப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
(4-ம் பக்கம் பார்க்க)

## தாக்கிய படையினர் மீன்களையும் பறித்தனர்

(நெல்லியடி)
நாகர்கோயில் கடற்பரப்பில் கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் மீது நேற்று ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் மீனவர்கள் கடலில் பாய்ந்து. நீந்தி வந்து கரை சேர்ந்தனர்.
(4-ம் பக்கம்பார்க்க)

## கிளாலி சம்பவத்தில் கடற்படை அதிகாரியும் சிப்பாய் ஒருவரும் காயம்

(யாழ்ப்பாணம்)
கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளாலி கடற்பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படை அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது
இத்தகவலை நேற்று கூட்டுப் படை தலைமையகம் உறுதி செய்தது குறிப்பிடத்தக்கது
இதேவேளை மட்டக்களப்பு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடை
(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்பு: சர்வஜன வாக்கெடுப்பு 94ம் ஆண்டுக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)
வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே நிர்வாகப் பிரிவாக இருக்க வேண்டுமா? இல்லையா என்பது குறித்த சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான திகதியை ஜனாதிபதி டி. பி. ஜயதுங்கா இம்மாதம் 19ம் திகதி பிறப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேலும் பிற்போட்டுள்ளார்.
1994ம் ஆண்டு பெப்ரவரி
(4ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

**விற்பனைக்கு**

பிடாரி அம்மன் கோவிலடி யில் (ஆனைக்கோட்டை— கொக்குவில்) புதிய வீட்டுடன் நல்ல சூழலில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. திங்கள், புதன், வெள்ளி தொடர்பு கொள்க. S. சிவா, C/o K. S முத்துலிங்கம், ஸ்ரேயக் இன்ஸ்ரியூட், நவாலி. (சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி) (கி-419)

**வியாழ மாற்றம் பலாபலன்கள்**

"ஜோஸ்யர்" முத்திரை. சிறுவர்களுக்கு அறிவுநூல், கலையறிவுப்புலத்துக்கு ஆய்வு நூல் பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலாபலன்கள் இறிகாந்த, மகிமிளன் புத்தகசாலையில் யாழ்ப்பாணம். (வியாபாரிகளுக்கு கழிவுண்டு.) (4ச2

**நீமியா உரம்**

"ஏரினும் நன்றால் எருவிடு தல் கட்டபின் நீரினும் நன்ற தன் காப்பு" (திருக்குறள்)
சும்மா உழுதலைப்பார்க்கினும் எருவிட்டு உரம் வைத்தல் சிறந்தது. களையெடுத்தபின் நீர் பாய்ச்சுவதைப்பார்க்கிலும், பயிரை அழிவு எய்தாமல் காப்பது சிறந்தது எருவிட்டு நீமியா உரம் வைத்தால் மண்வளம் பெருகுவதுடன் பயிரை அழிக்கும் பூச்சிகளை விரட்டி அழிவிலிருந்தும் காக்கிறது "மிக்வைற்" (எ-3364)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

**பெயர் மாற்றம்**

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அமைப்புகளில் ஒன்றாகச் செயற்பட்டு வரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகமானது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (Tamil Eelam Economic Development Organisation-Teedor) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அருள் மாதா செபக்கூடம்**

(அரியாலை)
யாழ் இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலயத்தில் 26ந் திகதி வியாழக்கிழமையும் 28ந் திகதி சனிக்கிழமையும் அதிகாலை செபக் கூடத்தில் வழிபாட்டுக்கு முன்னரான செபமாலை பிரார்த்தனை வழிபாடுகள் நடாத்தப்படவுள்ளது. (59)

**பணவீக்கம் குறைந்தது**

(கொழும்பு)
இலங்கையின் பணவீக்கம் 1991ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1992ம் ஆண்டு வெகுவாக குறைந்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.
1991ம் ஆண்டு 12.2 வீதமாக இருந்த பணவீக்கம் 1992ம் ஆண்டு 11 வீதமாக குறைந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாக அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

### அருள்மிகு பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி தேவஸ்தா[னம்]

# புதிய சித்திரத் தேர்களின் வெள்ளோட்ட வி[ழா]

## ★ சிறப்பு மலர் (26-08-1993) வியாழன்

ஈழ மணித்திரு நாட்டின் வடபுலத்தின் கண்ணே பண்டத்தரிப்பு பட்டினத்தின் தென்கிழக்கெல்லையில் அமைந்துள்ள பிரான்பற்றுக் கிராமத்தில் வயற்சோலைகள் சூழ்ந்த மருதநிலத்தை அமைவிடமாகக் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற அருள்மிகு பெரிய வளவு முருகப்பெருமானுக்கு பசுவைப் பிடித்து வைத்திருந்த அயற்கிராமத்தவரின் கனவில் தோன்றி அந்த பசு மாட்டை தனது பக்தனிடம் சேர்ப்பிக்குமாறு கூறியருளி முருகப்பெருமானே முன்னின்று அந்தப் பக்தனையும் பூசாரியார் இருப்பிடம் நோக்கி கூட்டிச்சென்றதாக கூறப்படுகின்றது.
இச் சம்பவத்தின் பின்பு ஆகம விதிகளின் படி நிர்மாணிக்கப்பெற்ற திருத்தலமாக இவ்வாலயம் விளங்குகின்றது.
அருள் சுரக்கும் பெரிய வளவினை சூழ்ந்து வாழும் பெருமக்கள் முருகப்பெருமானின் ஆலயமணியோசையில் தம்மை மெய்மறந்து அவனடியையடைந்து அப்பெருமானின் திருக்காட்சியை பலவாறுங்கண்டும் அனுபவித்

என அருணகிரி நாதப் பெருமான் முருகப் பெருமானிடம் கூறியவாறு நாட்டு நிலைமைகள் மூலப்பொருட்கள் தட்டுப்பாடுகள் என்பவற்றை வெல்லாம் பொருட்படுத்தாது அவனை சித்திரத்தேரிலே கண்டுவிட வேண்டுமென்ற அருளாசையால் ஒன்றுக்கு இரண்டு சித்திரத்தேர்களை உருவாக்கியது மட்டுமன்றி அந்நிர்மாணக் காலம் கூட எட்டே மாதங்களென்றால் அவனருளாட்சி தான் என்ன? எம்பெருமானின் அருளும்

ஆகியும் இந்நிர்[...] களுக்கு இ[...] போன்று அ[...] கின்ற மக்களு[...] க்கும் அவனது [...] பதாக கூறி[...] உற்சவவிழாவி[...] பெருவாழ்வினை[...] மேலோங்க எ[...] பாடிப்பர[...] என்றும் பெரும[...] வீகசக்தியை எ[...] கள் மலர்ந்து வ[...] அருள் புரிவான் திருமுருகன்.


## எல்லோரும் தெய்வீக சக்தி பெற
# அருள் புரிவான் திருமுருகன்

புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற இரண்டு சித்திரத்தேர்களின் வெள்ளோட்டவிழா இன்று மிகச் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல எம்பெருமானார் திருவருள் பாலித்துள்ளார்.

வயல் சேர் பிரான்
பதியுறை மரகதமயிலோனே
வருமடியார் பிணிதீர்த்
தாளும் வேற்கரத்தானே
வலம்வரும் சித்திரத்
தேர்க்காட்சி தந்தெம்மை
வாழ்விப்பாய் பெரியவள
வமர்ந்த முருகோனே.

எம்பெருமான் வள்ளிசமேதராக தேர்வலம் வருதற்கென அழகுற அமைக்கப்பெற்ற சித்திரப் பெருந்தேரொன்றும் முருகப்பெருமான் தனிமூர்த்தியாக வலம்வருவதற்கென மற்றொரு தேருமாக இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அருள் சொரியும் இவ்வாலயத்தின் தல வரலாறு பற்றி நோக்குகின்றபோது இன்று கிடைக்கப்பெறும் ஆலயம் தொடர்பான சான்றுகளுக்கு முற்பட்ட காலங்களில் ஆலய மூலஸ்தானம் அமைந்துள்ள இடத்தில் வேம்பு மரமொன்றின் கீழே வேலொன்று சுயமாகவே தோன்றியதாகவும் இவ்வேற்பெருமான் அவ்வூரைச்சேர்ந்த முருகபக்தர் ஒருவரின் கனவில் தோன்றி தன்னை ஆதரித்து வரும்படி அருளாணை கூறியதாகவும் அறியப்படுகின்றது. இதன் பிரகாரம் வேற்பெருமானின் அருளாணையைப் பெற்றுக்கொண்ட பக்தர் அன்றிலிருந்து பூசாரியாராக எம்பெருமானுக்கு தினமும் பாலினால் அபிசேகம் செய்து பூசைகள் நிகழ்த்திவரும் காலத்தில் ஒரு நாள் அபிசேகத்திற்கான பாலைக்கொடுக்கும் பசு காணமற் போய்விட்டது. அன்றிரவே எம்பிரான் பூசாரியாரும் இவ்வூர் மக்களும் எம்பெருமானின் அருட்திறன்களை பலவாறுணர்ந்து பூசை வழிபாடுகளை சிரமமாக நடத்திவந்ததுடன் ஆலயத்தின் கட்டுமனைத் திருப்பணிகளையும் ஒவ்வொன்றாக செய்வித்து வந்தனர். இதன் தொடர்ச்சியாக ஆலயத்தின் விஸ்தரிப்பு வேலைகளுக்கான அத்திவாரம் 1923ம் ஆண்டு போடப்பட்டதுடன் இராஜ



கோபுர அடித்தளமும் 1937ம் ஆண்டில் கட்டப்பட்டது இதன் பின்பு 1945ம் ஆண்டில் ஆனி மாத மூல நட்சத்திரத்தில் எம்பெருமான் திருவருள் துணையுடன் கும்பாபிசேகம் நிகழ்வுற்றது.
தொடர்ந்து இராஜகோபுர வேலைகள் தென்னிந்திய சிற்பாசாரியாரினது கைவண்ணத்தில் நிறைவேற்றப்பட்டன. கோபுரத்தின் கொலுவமைப்பை மேலும்செழுமைப்படுத்துவதற்காக 1989ம் ஆண்டில் அழகிய மணிமண்டபமும் அமைக்கப்பெற்று இன்று

தும் தமது குல தெய்வமாக முருகமூர்த்தியை கடவுளை ஆதரித்து வருவதுடன் ஆவணிப் பௌர்ணமியை தீர்த்தோற்சவமாகக்கொண்டு வருடாந்த மகோற்சவத்தையும் சிறப்பாக நடத்திவருகின்றனர். இதன்படி ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகளை ஆகமவிதிப்படி நிகழ்த்துவதுடன் திருப்பணி வேலைகளையெல்லாம் தனித்து முன்னின்று நடத்திவருகின்றனர்.

"கிள்ளிக்கொடுக்க அள்ளிக் கொடுப்பவன் அவனல்லவா" அவன் அள்ளிக்கொடுக்க இவ் வாலயச் சூழலில் அன்னதான மடங்களும், பொதுப்பணி மன்றங்களும் அமைப்புற நிர்மாணிக்கப்பட்டு இக்கிராமத்தின் விருத்தியை அரண் செய்கின்றன.

அள்ளி வழங்கும் முருகப்பெருமானும் இக்கிராமத்தின் கண் பல இடர்கள் வந்த வேளைகளிலெல்லாம் அவற்றை அணுகவிடாது. தன்னாட்சியை அருளாட்சியாகப் பொழிகின்றான். இவ்வாட்சியில் வயப்பட்ட மனவுந்தலவாக் உருவானவையே இப்புதிய இரண்டு சித்திரத்தேர்களுமாகும். 1945ம் ஆண்டிலிருந்து தனிமூர்த்தியாக முருகப்பெருமானும் 1950ம் ஆண்டிலிருந்து வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமானும் 1952ம் ஆண்டிலிருந்து விநாயகப் பெருமானும் தனித்தனியாக கட்டுத்தேர்களில் வருடா வருடம் தேர் வலம் வருகின்ற போதும் எம்பெருமான்களை சித்திரப்பெருந்தேர்களில் வீதிவலம் வரும் காட்சியைக் கண்டு கண்குளிர எண்ணிய அருளுணர்வு மேலீட்டின் பிரகாரம் சித்திரத்தேரமைக்கும் திருப்பணி 1993ம் ஆண்டு தைப்பூசத்தினத்தன்று ஆரம்பமானது.

> மலராக்கம்;
> திரு. நாகராசா
> ஸ்ரீஸ்கந்தராஜா

இத்திருப்பணிக்கு மென்மேலும்தாராள உதவுதல்கள் முருகப்பெருமானிடமிருந்து கிடைத்தமையால் எட்டு மாதங்களுக்குள் இப்புதிய சித்திரத்தேர்கள் நிர்மாணிக்கப் பெற்றன.

"நாளென் செயும்
வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்
கொடும் கூற்றென்
செய்யும் குமரேசனிரு
தாளுஞ் சிலம்புஞ்
சதங்கையுந் தண்டையுஞ்
சண்முகமும்
தோளுங் கடம்புமெனக்கு
முன்னே வந்து
தோன்றிடினே"

### சித்திரத்தேர்நிர்மாணிப்பு

இளம் கலைஞன் இராசதுரை பிரபாகரன் அவரின் தலைமையின் வழிநடத்தலில் அவரின் குழுவினர்களும் இணைந்து இத்தேரை உரு அமைத்தனர். மிக குறுகிய காலப்பகுதியில் மதி நுட்பம் தொழில்நுட்பம் கொண்டு மிக நேர்த்தியான வேலைகளை குறுகிய வயதுடைய பிரபாகரனும்தன் தாய்மாமனார் கி. கணபதிப்பிள்ளை (ஆசிரியர் யா. இ. கல்லூரி) இவரின் எண்ணத்தில் பதிந்த உணர்வுகளையும் ஆலயத்தின் வரலாறுகளையும் சிற்பங்களாகச் செதுக்கி மாணிக்கமணிகளசை திருச்சிற்பங்களிடைகட்டி பவளமதை திரட்டியெடுத்த திருத்தேர் சமைத்த பெருமை திருநெல்வேலி தந்த இளம் கலைஞன் பிரபாகரனையே சாரும். இத்தனை கலைப்படைப்புக்களையும் உருவாக்கிய இவருக்கு எமது கிராம மக்கள் பெருவாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவின் போது கலைஞன் பிரபாகரனுக்கும் அவர் குழுவினருக்கும் பொன்னாடை போர்த்தில் கௌரவிக்கப் படும்.

### கோவில் பிரதம குருமணி[யின்] ஆசிச் செய்தி

மகோற்சவ காலத்தில் கடைசியாக வருவது இரதோற்சவம். இவ்வுற்சவம் மிகவும் சிறப்புடையது. மும்மலங்களையும் அழித்து மக்களை ஆத்ம பீடேற்றத்துக்கும் நல்வாழ்க்கைக்கும் வழிவகுக்கின்றன இதனால் தான் பத்து நாள் உற்சவத்தில் ஒவ்வொரு நாள் உற்சவமும் ஒவ்வொரு காரணத்தைக் கொண்டு நடைபெறுகின்றன என்பதை நன்கறிவோம்.
எனவே பண்டத்தரிப்பு பிரான்பற்று பெரியவளவு வள்ளி தெய்வானை சமேதராக [...] பெருமானுக்கும் [...] பெருமானுக்கும் [...] புதுப்பொலிவுட[ன்] பாக்கியங்களுடனு[ம்] பட்ட இரு [...] வெள்ளோட்ட [...] அதே அவருடை[ய] மாகும்.

சிவ[...]
இ. லலகேஸ்வ[...]
தேவஸ்தான [...]

### மாதகல் பிள்ளையார் கோ[வில்] பிரதம குருக்களின் ஆசிச்செ[ய்தி]

படைத்தல், காத்தல், அழித்தல் என்று சொல்லப்படும் மூன்று தத்துவங்களும் தான் மகோற்சவம். இந்த மகோற்சவ காலத்தில் இரத உற்சவம் ஒரு முக்கியமான உற்சவம். இதில் பண்டத்தரிப்பு பிரான்பற்றுக்கிராமத்தில் உள்ள மக்கள் இவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் புதிதாக இரண்டு இரதம் இற்பப் போலிவுடன் நிர்மாணித்து இ[...] விழாவிற்கு செ[...] வள்ளி சமேத[...] மான் அருள் வே[...] மக்களுக்கு என[...] கனிந்த நல்லாசி[...] துக்கொள்கின்றே[ன்].

சிவஸ்ரீ-[...]
செல்லப்பாக்[...]
(மாதகல் கிழக்[கு])

### வெள்ளோட்ட விழா ஆசி உ[ரை]

சங்கானை பிரான்பற்று திவ்விய சேஸ் திரத்தில் தொன்மை மிகு பெரிய வளவில் அமைந்துள்ள ஆலயத்தில் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானைசமேதராராய் அடியவர்களுக்கு நல்லருள் புரிந்து வருகிறார்.
அழகு வர்ணம் நிரம்பப் பெற்ற இரண்டு சித்திரத்தேர்கள் மிகக் குறுகிய காலத்தில் அமைந்து அமைக்கப் பெற்று ஈண்டு வெள்ளோ[ட்டம்] நடைபெறுகின்ற[து].
ஞான ஒளியே வம் எம்மைக் [...] தேடி வருகிறா[ர்]. சொரூபன்ன். [...] நாளன்று பெரும[...] வீக சக்தியை [...] பெற்றுய்ய [...] ஆசி கூறி வாழ்த்[து]கின்றேன்.

கலைமணிக. தெய்[...]
சங்கானை சி[...]
பண்டத்தரி[ப்பு]

### முன்னியது முடிக்கும் முருகன் பெருமான்

யாழ். குடாநாட்டில் எத்தனையோ வழிபாட்டுத் தலங்கள் இன்று பக்தர்களால் வணங்கும் வாய்ப்பின்றி மூடிக்கிடக்கின்றன. ஆனால் ஒருசில திருக்கோயில்களில் நெருக்கடியின் மத்தியிலும் நைமித்தியங்கள் நடைபெறுவது சைவ மக்களின் புண்ணியப் பயனாகும். இவற்றில் ஒன்றாக நோக்குதற்குரியது பிரான் பற்று முருகமூர்த்தி ஆலயமாகும்.
அங்கு வாழும் முருகபக்தர் கள்வைராக்கியபக்திபூண்டவர்கள். எதுவரினும் உன்னைத் துதித்து அச்சமகற்றுவோம் என்ற திடசங்கற்[பம்] வர்கள். இதற்[...] இரு புதிய சி[த்திரத்தேர்கள்] யும் இவ்வாண்[டு] கவியுகவரதம் தேருலாவில் [...] கின்றார்கள். இ[...] தாமன் இருக்கமு[...] கப் பெருமானி[...] சைவ மக்களின் [...] இப்பெருமக்களை மேலும் தெய்[வ...] கச் செய்யும் [...] அமைகின்றேன்.

— தங்கம்மா அ[ப்பாக்குட்டி]
தெல்லிப்[பழை]

மாநகராட்சி ... யாழ்ப்பாணம்

**மணிவாக்கு**

அறிந்துகொள்; அல்லது அறிந்தோர்க்குச் செவிசாய்த்துத் தெரிந்து கொள்.

—பரிவர்த்தாஸாரி இரேஷின்

## நமது நோக்கு

### இதயபூமி!

ஒரு சமூகம் சுயநிர்ணய உரிமை பெற்று, தன்னாட்சி அமைப்பதற்கு ஐ. நா. சபை சில வழிகாட்டல் நெறிகளை வகுத்துள்ளது.

மொழி, கலாச்சாரம் ஆகியவற்றால் ஓர் இனம் ஒன்றுகூடி வாழ்வதோடு, அதற்கெனத் தனியான-தொடர்ச்சியான - பிரதேசம் இருக்கவேண்டும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தொடர்ச்சியான தமிழர் வாழும் பிரதேசமாக இருந்து வந்தது.

திட்டமிட்ட குடியேற்றங்களால் இதனைப் பிரித்துவிட்டால், தன்னாட்சிக் கோரிக்கை வெற்றி பெறாது என்பது சிங்களத் தலைவர்கள் போட்ட கணக்கு.

இந்தக் கணக்கின் அடிப்படையில் 1984-ல் பதவியாத் திட்டமும் பின்னர் மணலாறுத் திட்டமும் வகுக்கப்பட்டன.

ஆனால், வடகிழக்குப் பிரதேசம் பற்றிய சில வரலாற்று உண்மைகள் மறுக்கப்பட முடியாதவை; மறைக்கப்பட முடியாதவை!

1813 ஜூலையில் இலங்கைத் தேசாதிபதியாக இருந்த சேர் றொபேட் பிரௌன்றிக் இங்கிலாந்து அரசின் குடியேற்றச் செயலாளருக்கு எழுதியது என்ன?

"எல்லா மாகாணங்களிலும் தமிழும் பேசப்படுகின்றது. அந்தமொழி புத்தளம் தொடக்கம் மட்டக்களப்பு வரையும் வாழும் மக்களின் தேசிய மொழியாகும். எனவே சிங்களத்துடன் தமிழையும் சமஅந்தஸ்து நிலையில் வைக்க எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டீர்கள் என நம்புகிறேன்."

வட கிழக்கு ஒன்றிணைந்த பிரதேசமாக தமிழ் மொழி பேசுவோர் பிரதேசமாகத் தேசாதிபதியே கணித்துள்ளமை இக்கடித மூலம் தெளிவாகின்றது.

இன்று-தமிழரின் பாரம்பரிய பூமி பற்றி நாடாளுமன்றத்திலேயே வாசுதேவ நாணயக்கார குரல் எழுப்பியுள்ளார்!

"தென்பகுதியைச் சிங்கள மக்களின் பாரம்பரிய பூமி என்று கூறிக்கொள்ளும் அரசு, வடக்குக்கிழக்குப் பகுதியை தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்று கூறுவதற்கு ஏன் தயங்குகின்றது?" என அவர் தெளிவாகக் கேட்டிருக்கிறார்.

மணலாற்றுப் பகுதி வெறும் நிலம் மட்டுமல்ல; தமிழ்த் தேசியத்தின் இதயம்!

'வெலி ஓயா' எனப் பெயர் மாற்றி ஏமாற்றிவிடலாம் என்ற கனவு என்றுமே பலிக்கப் போவதில்லை!

"இதயபூமி" — அதன் தனித்துவம், மகத்துவம் மக்களால் உணரப்பட்டிருக்கும் என நம்புகிறோம்.

## ★ தெகிவளையில் க. பொ. த. (உ/த) பரீட்சை நிலயத்து புகுந்து அனுமதி அட்டைகள் அபகரிப்பு

(கொழும்பு)

தெஹிவளையிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை எழுதிய 54 பேரின் அனுமதி அட்டைகள் வாலிபரொருவரால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மேற்படி கல்லூரியில் பரீட்சை எழுதி முடிந்து பரீட்சார்த்திகள் வெளியேறிக் கொண்டிருந்த சமயம் மாலை 4 மணியளவில் பரீட்சை பண்டபத்துக்குள் திடீரென புகுந்த வாலிபர் அங்குள்ள பெண் மேற்பார்வையாளரிடம் வெளியே எடுத்துச் செல்வதற்கு கட்டி வைத்திருந்த 54 அனுமதி அட்டைப்பார்சலையும் அபகரித்துச் சென்றுவிட்டாரென்று தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பரீட்சை திணைக்களத்திற்கும் பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டதையடுத்து தொடர்ந்தும் மேற்படி 54 பேரும் பரீட்சை எழுத மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (71-இ)

## நெசவு உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்கள், நூல்கள் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் நூல் கிடைக்காமையால் நெசவு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை மேற்கொள்ள முடியாது இன்னல்களை அனுபவித்துக் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலைமை போக்கும் நோக்குடன் உற்பத்தியினை மேற்கொள்வதற்குத் தேவையான நூல்களையும் ஏனைய உபகரணங்களையும் பெற்றுத் தருவதற்கேற்ற நடவடிக்கைகளை தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் துரிதமாக மேற் கொண்டு வருகிறது.

மேற்படி உதவிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நெசவு உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 31ம் திகதிக்கு முன்னர் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## மதுரை ரயில் நிலைய தாக்கு: அ.தி.மு.க.வினர் என்னை கொலை செய்ய முயன்றனர்

### — வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

மதுரை ரயில் நிலையத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற கலவரத்தின் போது அ. தி. மு. க. வினர் தம்மைக் கொலைசெய்ய முயன்றதாக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று குற்றம் சாட்டியுள்ளார்.

தாம் சென்னை செல்வதற்காக ரயிலில் பிரயாணம் செய்ய முயன்றபோது அ. தி. மு. க. வினர் தம்மைத் தாக்க வந்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

இது சம்பந்தமான வழக்கு எதனையும் பொலிசார் பதிவு செய்யவில்லையெனக் குறிப்பிட்ட வாழப்பாடி ராமமூர்த்தி முதல்வர் ஜெயலலிதா எதிர்க்கட்சித்தலைவர்களுக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டி வருவதாகவும் இத்தகைய வன்முறைகள் தொடருமானால் அ.தி.மு.க.வினர் கடும் விளைவுகளைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்றும் அவர் கடுமையாகச் சாடியுள்ளார்.

இதற்கிடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவம் குறித்து தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மதுரையில் அனுமதியின்றி உண்ணாவிரதம் மேற்கொண்ட இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் 28 பேர் நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். (அ)

### இன்று

(கொழும்புத்துறை)

மிருசுவில் கெற்பலியில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேதராகிய பரமசிவன் ஆலயத்தில் இன்று 25ம் திகதி புதன்கிழமை காலை 8-00மணியளவில் சிவயாக பூசை நடைபெறவுள்ளது.

-154

## இராசிபலன்

25-08-1993

புதன்கிழமை

(தமிழுக்கு ஆவணி 09)

அட்டமி மு.ப. 8-02 வரை, அனுசம் பி. ப. 1-06 வரை, அமிர்தசித்தயோகம், கரிநாள் இராகுகாலம் நண்பகல் 12-05 முதல் 1-35 வரை சுபநேரம் மாலை 4-35 முதல் 5-05 வரை.

மேடம்: மந்தபுத்தி, நண்பர் விரோதம் மனச்சஞ்சலம்.

இடபம்: புதிய அனுபவம் காரியசித்தி தொழிற்சிறப்பு.

மிதுனம்: வீட்டில் சுபகாரியம் உறவினர் மகிழ்ச்சி பயணம்.

கடகம்: தவறான செயலினால் துன்பம் அலைச்சல்.

சிம்மம்: மனத்தாங்கல், அக்னிபயம் கடும் செலவு

கன்னி: வெளியார் உதவி, மனமகிழ்ச்சி சகோதரர் பிணக்கு.

துலாம்: அடம்பிடித்தல் தொழில்கஷ்டம் மனவெறுப்பு

விருச்சிகம்: உண்ணா நோன்பு தாயார் நன்மை, நினைத்தது கைகூடும்.

தனுசு: தடுமாற்றம் பகைவர் தொல்லை, கெட்ட சகவாசம்.

மகரம்: உடல் ஆரோக்கியம் மேலான நிலை இனசன உதவி.

கும்பம்: பணியாளர் ஒத்துழைப்பு, சகோதரபாசம் காரியசித்தி.

மீனம்: மனப்பயம் அதிகாரிகள் சினம் ஆவேச உணர்வு.

ஜோஸ்யர்

### தென்னாபிரிக்காவில் பக்தர்கள் மீது சூடு 10 பேர் பலி

(ஜொகனஸ்பேர்க்)

தெ. ஆபிரிக்க தலைநகர் ஜொகனஸ்பேர்க்கிற்கு அருகே மதவழிபாட்டில் கலந்து கொண்டோர் மீது இனந்தெரியாத 3 துப்பாக்கி நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பத்து சுறுப்பினர்கள் ஸ்தலத்திலே உயிரிழந்தனர்.

கொலைப்பட்டவர்களில் 9 பேர் ஆண்கள் எனவும் ஒருவர் பெண் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சூட்டினை நடத்தியோர் உடனடியாகவே அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனராம்.

மேலும் இச்சம்பவம்குறித்து ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அதிர்ச்சி தெரிவித்திருப்பதுடன் இவ்வாறான செயல்கள் நாட்டில் மீண்டும் பெரும் இனமோதலை தோற்றுவிக்குமெனவும் எச்சரித்துள்ளது. (சி)

### வி. பி. சிங் வெளியேறினார்

(புதுடில்லி)

வறிய நிலையிலுள்ள பின்தங்கிய மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் சிபாரிசு செய்யப்பட்ட "மண்டல் கமிஷன்" அறிக்கையை, அரசு நடைமுறைப்படுத்தும் வரை புதுடில்லிக்கு வருவதில்லையென்றுகூறி முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங், புதுடில்லியைவிட்டு நேற்று வெளியேறியுள்ளார். (க)

### தீவினைகள் தீர்க்கவரும் தெய்வம்

அழுதே அவள் கோயில் அற்புதநல் வாயில்
தொழுதேத்தும் தொண்டருடன் சூழ்ந்து - வழுவாத
பக்தியுடன் நின்றதனைப் பாடுவையேல் நினைவெல்லாம்
அத்தனையும் போமென் றறி.

★

அறிவின் தெரிவாய் அருளுருவாய் அன்பர்
குறியின் குறியாய்க் குலவி - செறியவரும்
தீவினைகள் தீர்க்கவரும் தெய்வமாம் துர்க்கையதன்
மேவினைபேல் எய்துமே வீடு.

— அம்பாள் அடியார்.

(இன்று தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் 7-ம் நாள் உற்சவம்.)


# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

★ **றீவைன்டிங்**

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைண்டிங் செய்தல் பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

★ **மோட்டா பைசிக்கிள் மெக்கானிசம்**

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டா பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 30-08-93 (ஏழமை நாட்கள்)

விபரங்களிற்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)

(சி-8365)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 150 கோடி ரூபா கடனுதவி!

(கொழும்பு)

இலங்கையின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 150 கோடி ரூபாவை கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இதேவேளை இலங்கையின் தொழில்நுட்ப அபிவிருத்திக்காகவும் 200 லட்சம் ரூபாவையும் மேற்படி வங்கி கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

தொழில் அபிவிருத்தியில், போதிய அனுபவம் பெற்ற தொழில் நிபுணர்கள் இலங்கையில் மிகக்குறைவாக இருப்பதினால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு பின்நிற்பதாகவும் இந்த வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (வி-ரி)

## சுப்பிரமணியசுவாமிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக காரைமடு என்ற பகுதியில் நேற்று முன்தினம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

தமிழக அரசு மேம்பாட்டுத் தலைவியும் மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினருமான திருமதி சுலோசனா தலைமையிலான குழுவினர் இவ்வார்ப்பாட்டத்தை நடாத்தினர். (ம-ரி)

## ★ பாகிஸ்தானுக்கு அடுத்ததாக படைகளுக்கு அதிக அளவில் செலவிடும் நாடு சிறிலங்கா

(லண்டன்)

சிறிலங்காவின் மொத்த தேசிய வருமானத்தில் 5.5 வீதமான நிதி படைகளுக்காகவே செலவிடப்படுகின்றது. பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக படைகளுக்கென அதிக விகிதத்தில் செலவிடும் நாடு சிறிலங்காவே என லண்டனிலிருந்து வெளியிடப்பட்ட "மிலிட்டறி பலன்ஸ்' என்ற நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நூலை சர்வதேச தந்திரோபாய ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை அடுத்து சிறிலங்கா இராணுவத்தினரின் எண்ணிக்கையை அரசு தொண்ணூறு ஆயிரமாக விரிவாக்கம் செய்தது. இதனால் பாதுகாப்புச்செலவு உயர்ந்தது.

பாதுகாப்பு செலவீனமாக செலவிடப்படும் பணத்தை பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்தி இருப்பின் நாட்டில் பெருமளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும் என்பதை ஜனாதிபதியும் ஒப்புக்கொண்டுள்ளார் எனவும் அந்த நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## சித்த மருத்துவ மாணவர் குழு கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவத்துறையைத் தனிப் பீடமாகக் கோரி, சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்திவரும் சித்த மருத்துவ மாணவர் மன்றப் பிரதிநிதிகள், உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்த நேற்றுக் கொழும்பு பயணமானார்கள்.

பதில் துணை வேந்தர் மேற்படி மாணவர் மன்ற உறுப்பினர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுப்பி வைத்துள்ளார். எனினும் மாணவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பல்கலைக்கழக நிர்வாகிகள், விரிவுரையாளர்கள் கொண்ட குழுவை நிர்வாகம் அனுப்பி வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## தமிழக அகதிகள் இன்று வருகின்றனர்

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து மற்றுமொரு தொகுதி அகதிகள் இன்று இலங்கைக்கு வருவார்கள் என்று புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் திலக் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

344 குடும்பங்களைச் சேர்ந்த 1079 பேர் இன்று திருகோணமலை வருவார்கள் என்றும் இவர்கள் திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

மன்னார்த்தீவுக்கு அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப் படவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ம-ரி-இ)

### 15 படையினருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான குழுவே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. அதிகாரிகள், பிரிகேடியர்கள் தரத்திலுள்ளவர்கள் உட்பட 15 பேருக்கெதிராக இராணுவ நீதிமன்றத்தின் முன் முதலில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட இருக்கின்றன. (ம)

### படைகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ட்டமுடியுமென சிறிலங்கா அரசு எண்ணுகிறது. புதிய சலுகைத்திட்டத்தின்படி இலங்கை இராணுவத்தில் உள்ள இராணுவத்தினர் இராணுவத்தை விட்டுச் செல்லாமல் இருப்பதற்காக தற்போது சேவையில் இவர்களுக்கு புதிய சலுகைகளை வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது.

இராணுவத்தினருக்கு வீட்டு வாடகைப்பணமாக ரூபா 850 முதல் 2 ஆயிரம் ரூபாய் வரை வழங்க முன்வந்துள்ளது.

இலவச போக்குவரத்து வசதிகளும், குடும்பத்திலுள்ள அனைவருக்கும் இலவச மருத்துவ சேவைகளையும் வழங்குவதென்றும் அரசு முடிவு செய்துள்ளது.

முன்னர் இவர்களுக்கான சலுகைத் தகைமை 5ம் வகுப்பாகக் குறைக்கப்பட்டமையும் சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டமையும் தெரிந்ததே என்றும் நேற்றுமுன்தினம் கொழும்பிலும் பிறபகுதிகளிலும் நடைபெற்ற இராணுவ சேவைக்கான ஆட்சேர்ப்பில் நூற்றுக்குச் சற்று அதிகமானோரே கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது (வி-ரி)

### அதிர்ச்சியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ப்பு வெற்றிநாள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: தமிழரின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதியை அபகரித்த சிங்கள அரசு அவற்றிற்கு சிங்களப் பெயர்களையும் சூட்டி, சிங்களவர்களை குடியமர்த்தி அம்மண்ணை சிங்களவர்கள் பூமியாக மாற்ற பெருமுயற்சிகளை செய்து வருகின்றது. அத்தகைய பழந்தமிழ்க் கிராமங்களில் ஒன்றுதான் மண்கிண்டிமலை.

இது கொக்குத்தொடுவாய் கிராமத்திலிருந்து முந்திரிகைக்குளம் நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்துள்ளது.

இப்பாதை ஓரம் பலமான தொடர் இராணுவ வேலி ஒன்றை அமைத்து, தமிழீழத்தை இரு கூறுகளாகப் பிரிக்க சிங்களப் படைகள் முயன்றன. இந்த இராணுவ வேலி உடைக்கப்படமுடியாத அளவுக்குப் பலமானதாக இருக்கவேண்டும் என்ற நோக்கில், மண்கிண்டிமலையில் சிங்களப்படைகள் முகாம் ஒன்றை அமைத்திருந்தன.

இந்த முகாம்தான் புலிகளின் பாய்ச்சலுக்கு உள்ளாகிச் சிங்களப் பேரினவாதிகளின் நாசகாரத் திட்டத்திற்குப் பலத்த அடி கொடுத்துள்ளது.

இன்றைய தினத்தில் கொண்டாடப்படும் இதயபூமி-1 வெற்றிவிழாவில் கலந்துகொண்டு சிறப்பித்து இந்த வெற்றிக்காக உயிர் கொடுத்த பத்து புலி வீரர்களுக்கு வீரவணக்கத்தைச் செலுத்துமாறும் அனைத்து மக்களையும் அன்போடு அழைக்கின்றோம் என்றும் விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ரி)

## தபால்கள் விநியோகம்

(திருநெல்வேலி)

வசதுவ கப்பல்மூலம் எடுத்து வரப்பட்ட தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நரோமா கப்பல் நோயாளர்களையும் அரச ஊழியர்களையும் ஏற்றிக் கொண்டு நேற்று மாலை பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து திருகோணமலைக்குச் சென்றது. (150-ரி)

### படை முகாம்களிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை காரைநகர் திருவடிநிலை கடற்பிராந்தியத்தில் இருந்தும் கரையோரப் பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வயல் வெளிகளில் விழுந்து வெடித்தமையினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. -56-ரி

### சித்தாண்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கும் இராணுவ முகாமில் உள்ள விசேட படையினர் மோட்டார் சைக்கிளில் வீதி ரோந்தில் ஈடுபடும்பொழுது வீதிகளில் செல்லும் இளைஞர்களைக் கைது செய்கின்றனர்.

இவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்களின் சடலங்களே, தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வீதிகளில் போடப்படுகின்றன. இதனால் அங்கு உள்ள மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். (ரி)

### மண்கிண்டிமலை

1ம் பக்கத் தொடர்ச்சி)

பதி திரு. அன்பு நேற்று பிற்பகல் 2 மணிக்கு திறந்துவைத்தார். மேற்படி முகாம் தகர்ப்பில் வீரச்சாவு அடைந்த பத்து மாவீரர்களின் புகைப்படங்களுக்கும், திரு. அன்பு ஈகைச்சுடரை ஏற்றிவைத்தார்.

மண்கிண்டி முகாம் தகர்ப்பு வெற்றிநாளையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் இதயபூமி 1 இது ஒரு வரலாற்றுப் பதிவு என்ற நூல் வெளியிடப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கை குறித்து இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் வீரச்சாவு அடைந்த மாவீரரது விபரங்கள் புகைப்பட ஆவணங்கள் என்பனவும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. (ரி)

## ஹெலி நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி நேற்று நண்பகல் 12-30மணிக்கும் 1-30மணிக்கும் இடையில் இரண்டு தடவைகள் வந்த ஹெலிகொப்டர் ஒன்று, யாழ். கரையோரப் பகுதி, கொக்குவில், ஆனைக்கோட்டைப் பகுதிகளை சுற்றி வட்டமிட்டு நோட்டம் பார்த்துச் சென்றது. (56-ரி)

### இளாலி சம்பவத்தில்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்றுமுன்தினம் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் கூட்டுப்படை தலைமையகம் மேலும் தெரிவித்தது.

இத்தாக்குதலின்போது படையினர் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றிய தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (அ-ரி)

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 18ம் திகதி கிழக்கு மாகாணத்திலும், 1994ம் ஆண்டு ஏப்ரல் 28ம் திகதி வடமாகாணத்திலும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துவதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி 1987-ம் ஆண்டு 42ம் மாகாண சபை சட்டத்தின் கீழ் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம-ரி-இ)

### மணலாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(22 வயது), கஸ்தூரி சந்திரமோகன் (10 வயது) ஆகியோரே இத்தாக்குதலில் காயமடைந்தவர்களாவர்.

இதேவேளை பூநகரி கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முற்பகல் 11-30 மணியளவில் 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (ரி)

### தாக்கிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை நேற்றுக்காலை பருத்தித்துறை முனைக்கடலில் மீன் பிடித்த மீனவர்களிடமிருந்து பெறுமதிமிக்க மீன்களைப் பறித்த ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து ஒரு இயந்திரப் படகினை சேதமாக்கினர்கள்.

கடலில் தாம் மீன் பிடிக்கச் சென்றவேளை திடீரென கடற்படையினர், சில படகுகளை சைகை காட்டி அழைத்து அங்கு இருந்த மீன்களை பறித்தனரென்றும் தமது காரியம் நிறைவேறியதும் துப்பாக்கி வேட்டின்மூலம் ஒரு இயந்திரப் படகினை சேதமாக்கினர் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். —160-ரி

## அரிசி விலை வீழ்ச்சி

(மானிப்பாய்)

சம்பா அரிசியின் விலை 1 ரூபா 50 சதத்தாலும், பாசிலி அரிசி 4-00 ரூபாவாலும் விலை குறைக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் அறிவித்துள்ளது.

இதன்படி முன்பு கிலோ 22 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்ட சம்பா அரிசி 21-00 ரூபாவாகவும், 46-00 ரூபாவாக இருந்த பாசிலி அரிசி 42-00 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் உதைபந்தாட்ட தொடர்களுக்கு போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பின்வரும் கழகங்கள் மோதுகின்றன.

முதல் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய கழகமும்-விநாயகர் கழகமும் மோதுகின்றன. 2வது ஆட்டத்தில் சென். நீக்கிலஸ் கழகமும், ஸ்கந்தா கழகமும் மோதுகின்றன. (வி-ரி)

### இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை கொழும்பு உட்பட 21 நிலையங்களிலும் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் எதிர்பார்த்தளவு வெற்றியளிக்கவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. இதனால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தைத் தொடர்வதில் மந்தநிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராட 33ஆயிரம் படையினர் தேவை என மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு முதலில் பத்தாயிரம் பேரைச் சேர்த்துக்கொள்ளும் நோக்குடன் இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது.

ஆயிரம் பேரைத்தானும் இந்த நேர்முகப் பரீட்சையில் சேர்த்துக் கொள்ளமுடியாது படைகளைப் பலப்படுத்தமுடியாது அரசு பெரும் பின்னடைவை அடைந்துள்ளதாகவும் அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இவக்கோலில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10 836/B